[1993 மார்ச் 30

166—

காட்டுமன்னார் கோயிலில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

*15875—திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

காட்டுமன்னார் கோயிலில் தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனை காட்டுமன்னார் கோயிலில் நிறுவுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இதற்காக காட்டுமன்னார் கோயிலில் பொருத்தமான நிலம் பெறுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் தொகுதி வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக முதன்முதலாக அங்கே ஒரு துணை மின் நிலையம் வழங்கி, அது செயல்பட இருக்கிற இந்த நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஒரு புதிய இரண்டாவது திட்டத்தையும் செயல்படுத்த இருப்பதை எண்ணி, என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டு, இது எவ்வளவு விரைவில் அமைக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் தாலுக்கா, மன்னார்குடி கிராமம் சர்வே எண். 52-ல் 3.39 ஏக்கர் நிலம் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தை நாங்கள் ஆய்வு செய்கிறபோது, கடலூர் மாவட்ட வருவாய் அதிகாரி, அது குளத்துப் புறம்போக்காக இருக்கிறது என்று அறிக்கை தந்திருக்கிற காரணத்தால் மாற்று இடத்தை தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

1993 மார்ச் 30]

மாற்று இடத்தை தேர்வு செய்து கொடுத்தால், ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பணிகளைத் துவங்குவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற, தமிழகத்தின் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

167—

சீர்காழி தொகுதியில் கூட்டுறவு பஞ்சாலை அமைத்தல்

*12754 திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் கூட்டுறவு பஞ்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் உரையில் இல்லை என்று சொல்லி விட்டாலும், இன்றைக்கு நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள எனது சீர்காழி தொகுதி முழுவதும் விவசாயத்தையே நம்பி யிருக்கும் தொகுதியாகும். விவசாயத் தொழிலும், பஞ்சு உற்பத்தியும் மிக அதிக அளவில் சீர்காழி தொகுதியில் நடைபெறுகின்றன. சுமார் 1500 ஏக்கரில் பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. அவைகள் அனைத்தும் சீர்காழிக்கு அடுத்து இருக்கிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படு கிறது. மேலும், 6 மாத காலம் விவசாயத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மீதம் உள்ள 6 மாத காலத்திற்கு எந்தவித வேலைவாய்ப் பும் இல்லாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. எனவே, விவசாயத் தொழிலாளர்களின் நலனைக் காக்கிற நம்முடைய காவல் தெய்வம், இதய தெய்வம்,